Registered No. 10, 845

# வெற்றிமணி

## 15-3-55

மலர் 1 | ஆசிரியர் எம். எம். பாரீஸ் விலை 25 சதம் | இதழ் 2

தினகரன், சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிகளுக்குரிய
சிறந்த விடைவிமர்சனி

## தினகரன் இல 9. பரிசு ரூ.3000.

முடிவு திகதி 12-4-55

கவனிக்க: வெற்றிமணி வெளியிடும்விமர்சனத்தை எவரும் வெற்றிமணி ஆசிரியரின் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது என்பதை அறிவிக்கின்றோம்

—ஆசிரியர்

## வெற்றிமணி நேயர்களுக்கு!

வெற்றிமணியைப் பின்பற்றிப் பரிசுபெறும் நேயர்கள் தயவு செய்து பரிசுபெற்ற போட்டி இல பரிசுத்தொகைமுதலியவற்றை அவ்வப்போது வெற்றிமணிக்கு அறிவிக்கவும்

வெற்றிமணி நேயர்கள் ஒவ்வொரு பிரதிக்கும் முத்திரைஅனுப்புவது வீண் சிரமமும்செலவுமாகும். எனவே கீழ்க்குறிப்பிட்டிருக்கும் தொகையைப் போஸ்ரல் ஆடர்மூலம் அனுப்பிவைத்தால் பிரதிகள் வெளியானதும் அவ்வப்பொழுது தபாலில் அனுப்பிவைக்கப்படும். அச்சுவிஷயத்தில் தாமதமேற்பட்டாலும் போட்டிமுடிவுக்கு 10 நாட்களுக்குமுன் கட்டாயமாக அனுப்பிவைக்கப்படும்.

**12–பிரதிகள் ரூபா 3–00 6 பிரதிகள் ரூபா 1–50**

**எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை**

போஸ்ரல் ஆடர் அனுப்பவேண்டிய விலாசம் :–

**Vettimani, 8/3 Baily Road Nawalapitiya**

வெற்றிமணி நேரில் கிடைக்குமிடங்கள்.

JAFFNA: Mohan & Co. Grand Bazaar, Jaffna.
KANDY: Meera Saibo & Bro Book.Stall, Muslim Hotel Kandy
NAWALAPITIYA:- M. O. Murugesapillai & Son Nawalapitiya
GAMPOLA:- S. P. Sellamuthupillai, Ambagamuwa Road, Gampola.

தினகரன் இல 9–க்கு இம்முறை பரிசு கூட்டப்பட்டிருப்பதால் தர்க்கரீதியாக விடை விமர்சனம் தினகரனுக்கு மாத்திரம் வெளியிடப்படுகிறது, சுதந்திரன் இலக்கம் 13க்குரிய விமர்சனம் 25–3–55இல் வெளியிடப்படும்

கடிதம் எழுதும்போது தயவுசெய்து உங்கள் விலாசங்களைத் தெளிவாக எழுதுக,

# தினகரன் போட்டி இல. 9.

## முதற்பரிசு ரூ. 1500 இரண்டாவது பரிசு ரூ. 1000
## முடிவு திகதி 12-4-55

### திட்டமான விடைகள்

இ—வ
1. பண்பாடு. 8. புற்பதி 17, தந்தம் 12, கிம்மை
19, குறவன் 21. கதுவி 22. அமிழ்து

மே—கீ 3. டுசி(சிடு) 5. கப்பம் 9. ற்இயமிறழ்[இயற்றமிழ்]
10. திசைமுகன் 15 மாதகல் 18. தவி 20 வதுவை 22. அரு

### மாற்றுவிடைகள்

இ—வ 16 ரமா— } இலக்குமி ரவி—சூரியன்
ரமை— } ரதி—குன்றிமணி

பலவிடைகளிருப்பினும் குறிப்பு இதைக்கூற என்பதிலிருந்து விடையாக வரக்கூடியது ஒரு சிறந்த பொருளல்ல என்பது வெளிப்படை, எனவே குன்றிமணி எனப்பொருள்படும் 'ரதி' சிறந்தவிடை ரவி—மாற்று விடை.

இ—வ 14 செய-சய, ஜெய, ஜய

செயம், சயம், ஜெயம், ஜயம் யாவும் வெற்றி என்ற பொருளேயே குறிக்கின்றன செய என்பதற்கு வெற்றிக்குறிப்புச் சொல் என உண்டு. எமது தெரிவு **செய** மாற்றுவிடை சய.

இ—வ 24 வைவை வைகை

சிரிப்பையுண்டாக்கும் குறிப்பு எப்படிமாற்றினும் எனக்கூறப்பட்டுள்ளது முதல் எழுத்தைப்பின்னுகவும் பின் எழுத்தை முன்னுகவும் மாற்றிப்பார்த்தால் பொருள் ஒன்றுதான், வை என்பதை ஒருதனிச் சொல்லாக எடுத்து வை-வை என விடையமைப்பதில் விசேஷ மெதுவுமில்லே. ஏனெனில் முதல் உள்ள எழுத்தே பின் எழுத்தாகவும் வருகின்றது. வைகை என்ற சொல்லிலே, வை, கை இரு தனிச்சொல்லாக எடுத்து வை கை என்றும் கை வை என்றும் மாற்றிப்பார்க்க ,இரண்டும் கை யை வை என்ற பொருளேயே குறிப்பதைக் காணலாம். வைகை திட்டமானவிடை வை வை மாற்றுவிடையாகும். சென்ற போட்டிக்கு 'மருத்துவம்' எனத் திட்டமாக்கிப் பலர் எழுத குருத்துவம் எனவிடையமைத்தஆசிரியர் இங்கேயும் வை வையைத் தெரிவுசெய்யலாம் அல்லவா?

## இணைப்புகள்

மே—கீ 1 பகரம்-அலங்காரம்
பகாரம்-அழகு
பட்சம்-அன்பு
பருவம்—இளமை
பர்வம்-பருவம்
பந்தம்-அழகு
படிவம்-வடிவு
படிமம்-வடிவம்
பருமம்-பருப்பம்
பருமன்—பருமை

இ—வ 7. தகம்-நித்திரை
வடம்-ஊர்
வணம்-பூந் தோட்டம்
வநம் } காடு
வனம் }
தடம்-மலைப்பக்கம்
தலம்—பூமி
சகம்—உலகம்
சலம்-நீர்
மனம்—உள்ளம்
மரம்—வானம்

போட்டியாசிரியர் தன் கைவரிசையைக் காட்டியுள்ளார் என எண்ண வேண்டாம். மே—கீ 1—க்கு பட்சம், பகரம், பகாரம், பந்தம் பொருத்தம ற்றவை. பர்வம்—பருவம் ஒரே பொருளுடையன. பருவத்தைப் பார்த்துத் தன்மைகளை அறியமுடியாது எனக் கூறவேண்டியதில்லை, எனவே படி வம், படிமம், பருமம், பருமன் ஆகிய விடைகள் கவனிக்கவேண்டியவை. சென்ற போட்டி மே-கீ 21க்குரிய குறிப்பு—"ஒருவனுடைய இதைக்கொ ண்டு அவரை மதிப்பிட்டுவிடக்கூடாது. என்பதாகும். இதற்கு உருவம் என்ற பொருள்படும். 'உரு' என்ற உத்தமமான விடையை நேர்மையாக எடுத்த ஆசிரியர்—இக்குறிப்புக்கும் உருவம் என்ற பொருளையுடைய படி வம், படிமம் இரண்டில் ஒன்றையே தெரிவு செய்வர் என்பது நிச்சயம். ஒருவரின் பருமையைப்பார்த்து என்று கூறுவதிலும் வடிவத்தைப் பார் த்து என்று கூறுவது சிறப்பு. அன்றியும். மே—கீ 7—க்கு மனம் சிறந்த விடை மனத்திலே யாம் காணும் காட்சிகள்தான் எத்தனை. நித்திரை வானம் என்றபொருளுடைய தகம், மரம் என்ற விடைகளையும் கவனிக்க நித்திரையிலும் யாம் காணும் காட்சிகளையும் மனத்திலேதான் காண்கின் றோம். **படிமம் - மனம்** உத்தமான விடை பருமன்-மனம், பருமம்— மனம் படிமம்—மரம், மாற்றுவிடைகள்

மே—கீ 2 பாவம்-நரகம்
பாசம்—பற்று

இ-வ 6 வசி-மழை
சசி-மழை, சந்திரன்

பாவஞ்செய்கிறவர்கள் திரும்பவும் திரும்பவும் பிறவி எடுக்கவேண்டியது தான். பற்றும் பிறவிக்குக்காரணம் இரண்டும் சிறப்பானவிடைகள் எமது விடை **பாசம்—சசி** மாற்றுவிடை பாவம்—வசி.

இ-வ 4 கடகம்—கைவளை
பாடகம்-மகளிர்காலணி
வேடகம்—காதணிவகையினொன்று,
சேடகம்—கேடகம்
காடகம்—சேலை

மே-கீ 4 கம்பு-தானியம்
பாம்பு-நாகம்
வேம்பு—ஓர் மரம்
சேம்பு—ஓர்செடி
காம்பு—மூங்கில்

மகளிர் அணியும் விசேட அணிகலன்களில் ஒன்று எனக்குறிப்புக் கூறுகிறது. ஆனந்தவிகடன் அகராதியில் அணிகலன்கள் எனபதன்கீழ் பெண்கள் அணிகலம் என்பதற்குபாடகம்என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் அணிகலன் என்பதற்கு கைவளை என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே கைவளை பெண்களின் விசேட அணிகலன்என்று கூறமுடியாது எனவே பாடகம். வேடகம் இரண்டும் சிறப்பானவை. பாடகம் என்பதற்கு மகளிர்காலணி என்றே இருப்பதால் **பாடகம்** சிறந்த விடை. கீழ்க் குறிப்புக்கும் பாம்பு ஏற்றவிடை, புற்று பற்றைக்காடு இவைகளில் இருக்கும் பாம்பு மரக்காடுகளிலும் காணப்படும் என்பது பொருத்தம்தானே மரக்காடுகளில் காம்பு, வேம்பு ஆகியமரங்கள் காணப்படும். என்றுகூறுவதில் அர்த்தமில்லையல்லவா—எனினும் மாற்றுவிடை வேடகம்—வேம்பு

இ—வ 11. அணி—ஆபரணம் மே—கீ 11 அகரம்
பணி—ஆபரணம் பகரம்
மணி—நவமணி, முத்து மகரம்

குறிப்பைக்கூர்ந்து கவனிக்க: ஆபரணம் என்றால் எவரும் விரும்புவார்கள்தானே. சாதாரணமணியென்றால் யார்விரும்பப்போகிறார்கள். ஆனால் சிறந்த நவமணி, அல்லது முத்து என்றால் அரசன்கூட விரும்புவான் தானே—எனவே மணிசிறந்தவிடை அன்றியும் இலக்கண நூலில் இனஎழுத்துக்கள் என்பதற்கு அகரத்துக்கு ஆகாரமும் பகரத்துக்கு மகரமும் இன எழுத்துக்களாம் எனக்கூறப்பட்டிருக்கிறதேயொழிய மகரத்திற்குப் பகரம் இன எழுத்தென்று கூறப்படவில்லை. எனவே பகரம்—அகரம் இன எழுத்துக்களல்ல.

மகரம் இன எழுத்தாகும் எமது தெரிவு. **மணி—மகரம்.**

இ—வ 13 இ—வ 15 மே—கீ 13
பருக—நுகர மாய—மடிய பயந்து
திருக—வளைதல் மாற—குணமாக பறந்து
திறந்து

மாய்தல் என்பது மடிதல் என்றும் மாறுதல் குணமாதல் என்றும் பொருள்படும் வழக்கத்தில் நோய்மடிந்துவிட்டது எனக்கூறப்படுகின்றது வெளிப்படைவிடை நோய்மாற என்றுதான் தோற்றுகிறது. ஆனால் எமது விடை **பருக-மாய பயந்து** மாற்றுவிடை பருக-மாற— பறந்து —திருக—மாற—திறந்து

இ-வ 23 சூழ்—ஆலோசனை மே—கீ 19 குமிழ்—நீர்க்குமிழி:
சூள்—ஆணை குமிள்-குமிழ்

சூழ்-குமிழ்திட்டமான விடையாக இருப்பினும் மாற்றுவிடைகளைத் தேடி அலையட்டுயட்டும் என்ற நோக்கத்தோடு ஒரு இடைவெளியை விட்டுள்ளார், ஆசிரியர் இளமையையும் செல்வமும் நீர்க்குமிழிக்குச் சமம் இன்னும் சூள் என்பதற்கு ஆலோசனை என்றபொருள் இல்லை.

Edited & Published by M. M. Faris at Midland Printers . Nawalapitiya